தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 3267/SCIC/2023**

திரு ப. செல்வம் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம், --- பொது அதிகார அமைப்பு
விருதுநகர்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 06.06.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், விருதுநகர் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். இந்து நாடார் உறவின்முறை சங்க நிர்வாகத்தின் மீது 12.04.2021, 13.04.2021, 17.04.2021 மற்றும் 19.07.2021 ஆகிய தேதிகளில் அளித்த புகார் மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை 4 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 07.07.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 20.10.2022 தேதியிட்டு

சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 14.11.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 21.02.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 3267/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 11.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 19.12.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 13.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி R. கிருஷ்ணம்மாள், சார்பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டபதிவாளர் அலுவலகம், விருதுநகர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் 07.07.2022, 19.12.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 13.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அத்தகவல்கள் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு எடுத்துரைக்கிறது.

6. எனவே, **மனுதாரர் தனது மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கும் திருத்திய / சரியான, தகவல்கள் / ஆவணங்களை 15 தினங்களுக்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த**

**அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையினை ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 3267/SCIC/2023**

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
விருதுநகர்.

**மனுதாரர்:-**
திரு ப. செல்வம்,
111/1, பாண்டியன் நகர் 4வது தெரு,
வார்டு எண்.10, திருத்தங்கல் 626 130
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File TK/PS